**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காங்கயம்.**
**முன்னிலை : திருமதி.கே.எஸ்.மாலதி, பி.ஏ., பி.எல்.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம்**

2023–ம் ஆண்டு ஜீன் மாதம் 10 ஆம் நாள் திங்கட்கிழமை
திருவள்ளுவராண்டு 2054, சோபகிருது வருடம், வைகாசித்திங்கள் 28 ம் நாள்

**இ.ம.எண்.2/2023 (89/2023)**

**in**

**அ.வ.எண்.331/2015**

P. சிவக்குமார் ... மனுதாரர்/ வாதி

/எதிர்/

கார்த்திகேய குருக்கள் ... எதிர்மனுதாரர்/ பிரதிவாதி

இம்மனு என் முன்பாக 15.04.2024 ம் தேதி இறுதி விசாரணைக்கு கொண்டு வரப்பட்டு மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.P.கனகராஜ், B.A.,B.L., அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.P.வடிவேல்சாமி, B.A.,B.L., அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதங்களையும், வழக்காவணங்களையும் பரிசீலனை செய்து, இதுநாள் வரை இந்நீதிமன்ற சீரான பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றத்தால் பகரப்படும்.

**உத்தரவு**

மனுதாரர் தரப்பில் அசல் வழக்கில் மனுவில் கண்டுள்ள விபரப்படி திருத்தம் செய்ய உத்தரவு வழங்க அனுமதி கோரி மனுதாரர்/வாதி தரப்பில் உரிமையியல் விசாரணை நடைமுறைச் சட்டம் கட்டளை 6 விதி 17 மற்றும் 18 ன் படி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. மனுதாரர்/வாதி தரப்பு மனுவின் சுருக்கம் :-**

i) இம்மனுவில் மனுதாரர் அசல் வழக்கில் வாதி ஆவார். தாவா வழக்கு சொத்துக்களில் கடை வைத்து வியாபாரம் செய்து மனுதாரர்/வாதி அனுபவித்து வருவதை எதிர்மனுதாரர்/பிரதிவாதி இடைஞ்சல் செய்யக் கூடாதென்று நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி மேற்படியார் பெயரில் சமூகம் நீதிமன்றத்தில் அசல் வழக்கு தாக்கல் செய்துள்ளார். மேற்படி வழக்கில் எதிர்மனுதாரர்/பிரதிவாதி எதிர்வழக்குரை தாக்கல் செய்து விசாரணைக்காக நிலுவையில் உள்ளது.

ii) மேற்படி வழக்கு விசாரணைக்காக இருந்து வந்த சமயத்தில் மனுதாரர் வழக்கறிஞர் அவர்கள் மூலம் கேசு கட்டில் உள்ள விபரங்களையும் எதிர்மனுதாரர்/பிரதிவாதியால் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் உள்ள விபரங்களையும் பார்க்கும்பொழுது தான் அதில் எதிர்மனுதாரர்/பிரதிவாதியால் பொய்யான விபரங்களையும் தாவா வழக்கு சொத்துக்களில் மனுதாரருக்குள்ள உரிமைகளை ஆட்சேபித்து மறுத்து கூறியுள்ளார். ஆகவே தாவா சொத்துக்கள் அரசுக்கு பாத்தியப்பட்ட நத்தம் புறம்போக்கு நிலத்தில் மனுதாரர் தகப்பனார் சுமார் 60 ஆண்டுகளுக்கு மேலாக ஆர்ஜிதம் செய்து கடைகள் வைத்து தொழில் செய்து அனுபவித்து வந்துள்ளார். மனுதாரர் தகப்பனார் இறந்ததற்கு பின்னிட்டு அந்த கடைகளை மேம்பாடு செய்து அதில் வியாபார தொழில் செய்து வருகிறார். இந்த நிலையில் தாவா வழக்கு சொத்துக்கள் மனுதாரருக்கு பாத்தியப்பட்டதல்ல என்று எதிர்வழக்குரையில் எதிர்மனுதாரர்/பிரதிவாதி கூறியுள்ளார்.

iii) எதிர்மனுதாரர்/பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் தாவா வழக்கு சொத்துக்களில் மனுதாரர் தகப்பனாருக்கு பாத்தியப்பட்டதல்ல என்றும்

அவருக்கு பின் மனுதாரருக்கு பாத்தியப்பட்டதல்ல என்று மனுதாரருடைய Title–ஐ ஆட்சேபித்துள்ளார். தாவா வழக்கு சொத்துக்கள் மனுதாரரின் தகப்பனாருக்கும் பாத்தியப்பட்டதென்றும், அவர் இறந்த பின்னிட்டு அந்த சொத்துக்கள் மனுதாரருக்கு பாத்தியப்பட்டதென்று மனுதாரர் தரப்பில் நிரூபிக்க வேண்டியுள்ளது. தாவா வழக்கில் கண்டுள்ள சொத்துக்கள் மனுதாரருக்கு பாத்தியப்பட்டதென்று விளம்புகை பரிகாரம் கோரி வழக்கில் திருத்தம் செய்ய வேண்டியது அவசியமாக உள்ளது. அவ்வாறு திருத்துவதினால் O.S.No.331/2015 வழக்கின் தன்மைகள் எதுவும் மாறுபடாது. ஆகவே மனுவில் கண்டுள்ளபடி அசல் வழக்கில் திருத்தம் செய்ய அனுமதி வழங்காத பட்சத்தில் தாவா வழக்கு சொத்துக்கள் மனுதாரருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்பதை நிரூபிக்க முடியாமல் போய் மனுதாரருக்கு பெருத்த இழப்பும், கஷ்ட, நஷ்டமும் ஏற்படும்.

iv) ஆகவே சமூகம் கோர்ட்டார் அவர்கள் அசல் வழக்கில் மனுவில் கண்டுள்ள விபரப்படி திருத்தம் செய்ய உத்தரவு வழங்கி அனுமதிக்க வேண்டும் என்பதே மனுதாரர்/வாதி தரப்பின் மனுவின் சுருக்கமாகும்.

**<u>2. எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரை சுருக்கம் :–</u>**

i) மனுதாரர்கள் மனு பொய் மோசடி, சட்டப்படியும் நியாயப்படியும் செல்லத்தக்கதல்ல. எதிர்மனுதாரர்/பிரதிவாதி இவ்வெதிர் உரையில் வெளிப்படையாக ஒத்துக்கொண்ட சங்கதிகளைத் தவிர மனுவில் கண்ட மற்ற சங்கதிகளை மனுதாரரே கண்டிப்பாக நிரூபிக்க வேண்டியது.

ii) மனுதாரர் அசல் வழக்கை நிலைக்கால உறுத்துக்கட்டளைக்காக தாக்கல் செய்துவிட்டு மேற்படி தாவா சொத்தான அரசு புறம்போக்கு நிலம் எனவும், அதை ஆக்கிரமித்து 60 வருடங்களாக பிரபாகரன் என்ற பெயரில்

தேநீர்கடை நடத்தி வருவதாகவும் மேற்படி கடையை வெளிப்படையாகவும் தொடர்ச்சியாகவும் எதிர்மனுதாரருக்கு தெரிய நடத்தி வருவதாகவும் அதனால் பிரதிவாதி தாவா சொத்தில் எவ்வித இடையூறும் செய்யக்கூடாதென நிலைக்கால உறுத்துக்கட்டளைக்காக வழக்கை தாக்கல் செய்துவிட்டு தற்போத மனுதாரர் விளம்புகை பரிகாரத்திற்காக வழக்கை திருத்தம் செய்யக்கோருவது எவ்விதத்திலம் நிலைக்கத்தக்கதல்ல.

iii) தாவா சொத்தில் மனுதாரரின் தகப்பனார் 60 வருடங்களுக்கு மேலாக டீக்கடை வைத்து நடத்தி வருவதாக கூறுவது பொய்யாகும். மனுதாரரின் தகப்பனார் இறப்பிற்கு பின்னிட்டு மனுதாரர் தாவா சொத்தில் தொழில் செய்து வருவதாக கூறுவது பொய்யாகும். தாவா சொத்தில் டைட்டில் குறித்து எதிர்மனுதாரர் ஆட்சேபித்துள்ளதால் விளம்புகை பரிகாரத்திற்காக வழக்குரையை திருத்தம் செய்யக்கோரி மனுதாக்கல் செய்துள்ளது எந்த வகையிலும் நிலைக்கத்தக்கதல்ல. இந்த எதிர்மனுதாரர் பெயரில் தாவா சொத்தைப் பொறுத்து 02.06.2015 ம் தேதி பாகப்பிரிவினை செய்யப்பட்டு அதில் ஏ செட்யூல் சொத்தாக தாவா சொத்து பிரதிவாதிக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. மேற்படி விபரம் குறித்து பிரதிவாதி கடந்த 02.03.2016 ம் தேதி எதிர்வழக்குரையும் தாக்கல் செய்துள்ளார். மனுதாரர் பின் யோசனையாக கடந்த 7 வருடத்திற்கு பிறகு இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

iv) மனுதாரர் மனுவில் என்ன காரணத்திற்காக வழக்குரையை திருத்தவேண்டும் என்பதற்கான காரணத்தை முன்வைக்கவில்லை. மனுச்சொத்தானது பல லட்சம் மதிப்புள்ள சொத்தை மனுவில் ரூ.50,000/- என மதிப்பிட்டு காட்டியுள்ளது தவறானதாகும். தாவா சொத்து மனுதாரர் ஆக்கிரமித்து அனுபவித்து வருவதாக கூறுவது தவறானதாகும். தாவா சொத்தானது

எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்ட சொத்தாகும். தாவா சொத்தின் உரிமையாளர் எதிர்மனுதாரர் ஆவார். மனுதாரர் தாவாவில் குறிப்பிட்டுள்ளதுபோல் தாவா சொத்தானது அரசு புறம்போக்கு நிலம் அல்ல. வாதியோ, வாதியின் தகப்பனாரோ நீண்ட நெடுங்காலமாக அனுபவிக்கவில்லை. தாவா சொத்து எதிர்மனுதாரரின் குடும்பத்திற்கு பாத்தியப்பட்டதாக இருந்து வந்த நிலையில் மனுதாரர் எதிர்மனுதாரரை அணுகி உணவகம் வைத்து தொழில் செய்ய வாடகைக்கு கேட்டதில் எதிர்மனுதாரர் ஒப்புக்கொண்டு கடந்த 02.10.2022 ம் தேதி இருவரும் சேர்ந்து வாடகை ஒப்பந்த பத்திரத்தை ஏற்படுத்திக் கொண்டுள்ளார்கள். மேற்படி வாடகை ஒப்பந்தமானது 3 வருட காலம் நிர்ணயம் செய்து மாதவாடகை ரூ.1500/- எனவும் முன்பணம் ரூ.22,000/- ஆகவும் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. பின்னிட்டு 3 வருடகாலம் முடிவடைந்த பின்னர் ரூ.22,000/-ஐ எதிர்மனுதாரர் மனுதாரரிடம் செலுத்தி காலி செய்யகோரியதில் மனுதாரர் காலி செய்ய மறுத்து மோசடியாக தாவா சொத்து நத்தம் புறம்போக்கு நிலம் என்றும், அதில் மனுதாரரின் தகப்பனார் 60 வருடங்களுக்கு முன்பு ஆர்ஜிதம் செய்ய பிரபாகரன் தேநீர்கடை மற்றும் உணவகம் ஆரம்பித்து தொழில் செய்து வருவதாகவும் அதனால் தாவா சொத்து மனுதாரருக்கு ஆனுபவப்படி பாத்தியப்பட்டது என்று கூறி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்.

v) மனுதாரர் தாவா சொத்தில் தேநீர்கடை மற்றும் உணவகம் வைத்து நடத்தி வருவதாக கூறியுள்ளபோதும் எதிர்மனுதாரர் தரப்பில் தாவா சொத்து எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்ட சொத்தாக இருந்து மனுதாரருக்கு வாடகை விட்டுள்ளார். மனுசொத்தை பொறுத்து பிரதிவாதியின் தகப்பனார் சுவாதீன அனுபவத்தில் இருந்து வருவதால் காங்கயம் தனி வட்டாட்சியர் கடந்த 02.07.1996 ம் தேதி இந்த தாவா சொத்தை பொறுத்து எதிர்மனுதாரர் மற்றும் அவரத சகோதரர் தியாகராஜகுருக்கள் ஆகியோர் பெயரில் மனைவாரி பட்டா

எண்.1012 ல் பட்டா வழங்கப்பட்டுள்ளது. பின்னிட்டு எதிர்மனுதாரரும் அவரது சகோதரரும் தாவா சொத்தை கூட்டாக அனுபவித்து வந்துள்ளார்கள். இந்நிலையில் தாவா சொத்துக்களையும் இதர சொத்துக்களையும் பொறுத்த எதிர்மனுதாரர் மற்றும் அவரது சகோதரர் தியாகராஜகுருக்களும் கடந்த 02.06.2015 ம் தேதி பாகப்பிரிவினை ஆவணம் ஏற்படுத்திக் கொண்டுள்ளார்கள்.

vi) மேற்படி பாகப்பிரிவினையில் ஏ செட்யூல் சொத்து எதிர்மனுதாரருக்கும் பி செட்யூல் சொத்து தியாகராஜகுருக்களும் ஒதுக்கப்பட்டுள்ளது. எதிர்மனுதாரருக்கு ஒதுக்கப்பட்ட ஏ செட்யூல் சொத்தில் தாவா சொத்தும் இதர சொத்துக்களும் ஒதுக்கப்பட்டுள்ளது. பின்னிட்டு எதிர்மனுதாரரின் தனிப்பட்ட சுவாதீனத்தில் இருந்து வரும் சொத்தாகும். இந்நிலையில் எதிர்மனுதாரர் 02.06.2015 ம் தேதி செய்துகொண்ட பாகப்பிரிவினையில் ஏ செட்யூலாக இந்த எதிர்மனுதாரருக்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்களைப் பொறுத்து அவரது குடும்ப உறுப்பினர்களில் கடந்த 26.06.2015 ம் தேதி பாகப்பிரிவினை செய்து கொண்டுள்ளார்கள். மேற்படி பாகப்பிரிவினையில் தாவா சொத்தானது பிரதிவாதியின் மகன்களான S.K.ராஜசேகரன் மற்றும் S.K.மகேஷ்வரனுக்கு கூட்டாக ஒதுக்கப்பட்டுள்ளது. ஆகவே தாவா சொத்துக்களானது பிரதிவாதியின் மகன்களுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்பதால் வாதி இந்த வழக்கை ஏற்கனவே பாகப்பிரிவினை ஆவணம் ஏற்பட்ட நிலையில் அதை மறைத்து விளம்புகை பரிகாரம் கோர இயலாது. மனுதாரர் பெயரிலோ அவரது தகப்பனார் பெயரிலோ செய்யப்பட்ட ஆவணங்களோ வருவாய்த்துறை ஆவணங்களோ எதுவும் இல்லாத நிலையில் தாவா சொத்தை பொறுத்து விளம்புகை பரிகாரம் கோர இயலாது. ஆகையால் மனுதாரரின் மனுவை எதிர்மனுதாரரின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டுமென்பதே எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பின் எதிர்வழக்குரை சுருக்கமாகும்.

3. இரு தரப்பும் கேட்கப்பட்டது, வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டது, இரு தரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை மற்றும் சான்றாவணங்கள் தாக்கல் செய்யப்படவில்லை. மனுதாரர் தரப்பில் எழுத்துமூலமான வாதுரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும் மனுதாரர் தரப்பில் கீழ்க்கண்ட முன்தீர்ப்புரைகள் சுட்டிக்காட்டப்பட்டு வாதிடப்பட்டது. 2000-2-L.W.794 Saraswathi Ammal Vs. Ponnammal and another, 2000 (III) CTC 389 Sanjeevi Ammal and 3 others Vs. Narasimha Naicker and another, 2002(4) CCC 1 (SC) Sampath Kumar vs. Ayyakannu & Anr.

4. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், இம்மனு அனுமதிக்கத்தக்கதா ? இல்லையா? என்பதாகும்.

**5. தீர்வு:-**

6. மனுதாரர் தரப்பில் தாவா சொத்துக்கள் அரசுக்கு பாத்தியப்பட்ட நத்தம் புறம்போக்கு நிலம் என்றும், அதை மனுதாரர் தகப்பனார் சுமார் 60 ஆண்டுகளுக்கு மேலாக ஆர்ஜிதம் செய்து கடைகள் வைத்து தொழில் செய்து அனுபவித்து வந்துள்ளார் என்றும், மனுதாரர் தகப்பனார் இறந்ததற்கு பின்னிட்டு மேற்படி கடைகளை மேம்பாடு செய்து மனுதாரர் அதில் வியாபாரம் செய்து வருகிறார் என்றும், இந்த நிலையில் தாவா வழக்கு சொத்துக்கள் மனுதாரருக்கு பாத்தியப்பட்டதல்ல என்று எதிர்வழக்குரையில் எதிர்மனுதாரர்/பிரதிவாதி கூறியுள்ளார் என்றும், தாவா வழக்கு சொத்துக்கள் மனுதாரரின் தகப்பனாருக்கும் பாத்தியப்பட்டதென்றும், அவர் இறந்த பின்னிட்டு அந்த சொத்துக்கள் மனுதாரருக்கு பாத்தியப்பட்டதென்று மனுதாரர் தரப்பில் நிரூபிக்க வேண்டியுள்ளது என்றும், தாவா வழக்கில் கண்டுள்ள சொத்துக்கள்

மனுதாரருக்கு பாத்தியப்பட்டதென்று விளம்புகை பரிகாரம் கோரி அசல் வழக்கில் திருத்தம் செய்ய வேண்டியது அவசியமாக உள்ளது என்றும், அவ்வாறு அசல் வழக்கில் திருத்தம் செய்வதால் அசல் வழக்கின் தன்மைகள் எதுவும் மாறுபடாது என்றும் சொல்லப்பட்டுள்ளது.

7. எதிர்மனுதாரர் தரப்பில் எதிர்மனுதாரர் குடும்ப பாகப்பிரிவினையில் ஏ செட்யூல் சொத்து எதிர்மனுதாரருக்கும் பி செட்யூல் சொத்து தியாகராஜகுருக்களும் ஒதுக்கப்பட்டுள்ளது என்றும், எதிர்மனுதாரருக்கு ஒதுக்கப்பட்ட ஏ செட்யூல் சொத்தில் தாவா சொத்தும் இதர சொத்துக்களும் ஒதுக்கப்பட்டுள்ளது என்றும், பின்னிட்டு எதிர்மனுதாரரின் தனிப்பட்ட சுவாதீனத்தில் இருந்து வரும் சொத்தாகும் என்றும், இந்நிலையில் எதிர்மனுதாரர் 02.06.2015 ம் தேதி செய்துகொண்ட பாகப்பிரிவினையில் ஏ செட்யூலாக இந்த எதிர்மனுதாரருக்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்களைப் பொறுத்து அவரது குடும்ப உறுப்பினர்களில் கடந்த 26.06.2015 ம் தேதி பாகப்பிரிவினை செய்து கொண்டுள்ளார்கள் என்றும், மேற்படி பாகப்பிரிவினையில் தாவா சொத்தானது பிரதிவாதியின் மகன்களான S.K.ராஜசேகரன் மற்றும் S.K.மகேஷ்வரனுக்கு கூட்டாக ஒதுக்கப்பட்டுள்ளது என்றும், ஆகவே தாவா சொத்துக்களானது பிரதிவாதியின் மகன்களுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்பதால் வாதி இந்த வழக்கை ஏற்கனவே பாகப்பிரிவினை ஆவணம் ஏற்பட்ட நிலையில் அதை மறைத்து விளம்புகை பரிகாரம் கோர இயலாது என்றும், எனவே இம்மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிடவேண்டும் என்று சொல்லப்பட்டுள்ளது.

8. வழக்காவணங்களை பரிசீலிக்கும் போது அசல் வழக்கானது வாதியால் பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரத்திற்காக தாக்கல்

செய்யப்பட்டு, எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டு கடந்த 02.03.2016 அன்று அசல் வழக்கில் வழக்கெழுவினாக்கள் வனையப்பட்டு மனுதாரர் தரப்பு சாட்சி விசாரணைக்காக அசல் வழக்கு ஒத்திவைக்கப்பட்ட நிலையில் அசல் வழக்கில் சொத்து விபரத்தில் கண்டுள்ள சொத்துக்கள் மனுதாரருக்கு பாத்தியப்பட்டதென்று விளம்புகை பரிகாரம் கோரி அசல் வழக்கில் திருத்தம் செய்ய வேண்டி மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

9. மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனுவில் வழக்கு விசாரணைக்காக போடப்பட்ட சமயத்தில் வழக்குரையில் உள்ள விபரங்களையும் எதிர்வழக்குரையில் உள்ள விபரங்களையும் பரிசீலித்து பார்த்த போதுதான் எதிர்மனுதாரர் தாவா வழக்கு சொத்துக்களில் மனுதாரருக்குள்ள உரிமைகளை ஆட்சேபித்து மறுத்து கூறியுள்ளார் என்றும், எனவே, தாவா சொத்துக்கள் அரசுக்கு பாத்தியப்பட்ட நத்தம் புறம்போக்கு நிலத்தில் மனுதாரரின் தகப்பனார் சுமார் 60 ஆண்டுகளுக்கு மேலாக ஆர்ஜிதம் செய்து கடைகள் அமைத்து தொழில் செய்து அனுபவித்து வந்துள்ளார் என்றும், மனுதாரரின் தகப்பனார் இறந்ததற்கு பின்னிட்டு மனுதாரர் கடைகளை மேம்பாடு செய்து வியாபாரம் செய்து வருவதாகவும், எனவே மனுதாரரின் உரிமை மூலத்தை எதிர்மனுதாரர் ஆடசேபித்துள்ளதால் விளம்புகை பரிகாரத்திற்காக அசல் வழக்கை திருத்தம் செய்ய வேண்டும் என்று சொல்லப்பட்டுள்ளது.

10. எதிர்மனுதாரர் தரப்பில் தாவா சொத்து எதிர்மனுதாரர்களுக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றும், தாவா சொத்தில் வாதியோ, வாதியின் தகப்பனாரோ அனுபவம் செய்து வரவில்லை என்றும், மனுதாரர் எதிர்மனுதாரரை அணுகி உணவகம் வைத்து தொழில் செய்ய வாடைக்கு கேட்டதில் மனுதாரரும்,

எதிர்மனுதாரரும் கடந்த 02.10.2022ம் தேதி ஒப்புக்கொண்டு ஒரு வாடகை ஒப்பந்தத்தை ஏற்படுத்தி ஒப்பந்த காலம் 3 வருடங்கள் என முடிவு செய்ப்பட்டு மாத வாடகை ரூ.1500/- எனவும், முன்பணம் ரூ.22,000/- ஆகவும் நிர்ணயம் செய்து கொள்ளப்பட்டுள்ளது என்றும், பின்னிட்டு மனுதாரர் தாவா கடையை காலி செய்ய மறுத்து தாவா சொத்து நத்தம் புறம்போக்கு என்றும், அதை 60 ஆண்டுகளுக்கு மேலாக அனுபவம் செய்து வருவதாகவும் கூறி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் எனவும், தாவா சொத்தைப் பொறுத்து எதிர்மனுதாரர் மற்றும் அவரது சகோதரர்கள் பெயரில் பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றும் சொல்லப்பட்டுள்ளது.

11. மனுதாரர் தரப்பில் தாவா சொத்தை வாதியின் தகப்பனார் 60 ஆண்டுகளுக்கு மேலாக அனுபவம் செய்து வந்து பின்னிட்டு வாதி அனுபவம் செய்து வருவதாகவும், தாவா சொத்துக்கள் வாதிக்கு பாத்தியப்பட்டது என்று சொல்லப்பட்டு பிரதிவாதி தரப்பில் தாவா சொத்து பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என்றும் மறுக்கப்பட்டுள்ளது. மேற்படி சங்கதிகளை இரு தரப்பு சாட்சியங்கள் விசாரணைக்கு பின்னிட்டு வழக்கின் இறுதியில் தான் அதைப் பற்றி தீர்மானிக்க இயலுமே தவிர திருத்தம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனுவில் அது குறித்து தீர்மானிக்க இயலாது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

12. மேலும் மேலே கண்ட பரிசீலனைகளில் இருந்து அசல் வழக்கின் சாட்சி  விசாரணை இன்னும் ஆரம்பிக்கப்படாத நிலையிலும் தாவா சொத்தில் வாதியின் உரிமை மூலத்தை பிரதிவாதி மறுத்துள்ளதாலும், தாவா சொத்தின் உரிமை மூலம் யார் வசம் உள்ளது என்பதைப் பொறுத்து இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அசல் வழக்கில் தீர்மானம் செய்ய முடியுமே தவிர

இம்மனுவில் அதைப் பொறுத்து தீர்மானிக்க இயலாது என்பதாலும் இம்மனுவில் கண்டுள்ள திருத்தங்கள் அசல் வழக்கின் தன்மை மற்றும் அடிப்படையை மாற்றும் வகையில் இல்லை என்பதாலும் மேற்படி திருத்தங்கள் அசல் வழக்கில் செய்யப்படும் பட்சத்தில் தான் வழக்கை மேற்கொண்டு நடத்த முடியும் என்று மனுதாரர் தரப்பில் சொல்லியுள்ள சங்கதிகள் நீதிமன்றத்தால் ஏற்கும்படியாக உள்ளதாலும் தரப்பினர்களுக்கிடையேயுள்ள பிரச்சனையை இறுதியாக தீர்க்கும் பொருட்டும் இம்மனுவை அனுமதித்து உத்தரவிடுவதே நீதியின்பால் சிறந்தது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

13. ஆனால் எதிர்மனுதாரர் தரப்பில் காலம் கடந்து இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் இம்மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென்று சொல்லப்பட்டுள்ள சங்கதிகளைப் பொறுத்து பரிசீலிக்கும்போது எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரையில் எதிர்மனுதாரர் தரப்பில் தாவா சொத்து எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றும், தாவா சொத்தில் வாதியோ, வாதியின் தகப்பனாரோ அனுபவம் செய்து வரவில்லை என்று குறிப்பிடப்பட்டு எதிர்மனுதாரர் தரப்பில் எதிர்வழக்குரையானது கடந்த 02.03.2016 அன்று தாக்கல் செய்யப்பட்டு அன்றைய தினமே அசல் வழக்கில் எழுவினாக்கள் வனையப்பட்டுள்ளது. பின்னிட்டு பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையை பார்த்தபோது தான் தாவா சொத்தில் மனுதாரருக்கு உள்ள உரிமையை எதிர்மனுதாரர் மறுத்து கூறியுள்ள விபரம் தெரிய வந்ததாக அசல் வழக்கில் திருத்தம் கோரி இம்மனுவானது மனுதாரரால் மிகவும் காலதாமதமாக கடந்த 01.02.2023 அன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பது தெளிவாகிறது.

14. எனவே மேலேகண்ட பரிசீலனைகளின்படி அசல் வழக்கின் சாட்சி விசாரணை இன்னும் ஆரம்பிக்கப்படாத நிலையிலும் தாவா சொத்தில் வாதியின் உரிமை மூலத்தை பிரதிவாதி மறுத்துள்ளதாலும், தாவா சொத்தின் உரிமை மூலம் யார் வசம் உள்ளது என்பதைப் பொறுத்து இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அசல் வழக்கில் தீர்மானம் செய்ய முடியுமே தவிர இம்மனுவில் அதைப் பொறுத்து தீர்மானிக்க இயலாது என்பதாலும் இம்மனுவில் கண்டுள்ள திருத்தங்கள் அசல் வழக்கின் தன்மை மற்றும் அடிப்படையை மாற்றும் வகையில் இல்லை என்பதாலும் மேற்படி திருத்தங்கள் அசல் வழக்கில் செய்யப்படும் பட்சத்தில் தான் வழக்கை மேற்கொண்டு நடத்த முடியும் என்று மனுதாரர் தரப்பில் சொல்லியுள்ள சங்கதிகள் நீதிமன்றத்தால் ஏற்கும்படியாக உள்ளதாலும் தரப்பினர்களுக்கிடையேயுள்ள பிரச்சனையை இறுதியாக தீர்க்கும் பொருட்டும் இம்மனுவை அனுமதித்து உத்தரவிடுவதே நீதியின்பால் சிறந்தது என்று இந்நீதிமன்றம் தீர்மானித்து, இம்மனு மிகவும் காலதாமதமாக தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் இம்மனுவை செலவுத் தொகையுடன் அனுமதிப்பதே நீதியின்பால் சிறந்தது என்று இந்நீதிமன்றம் தீர்மானித்து கீழ் கண்ட நிபந்தனைகளின் பேரில் இம்மனுவை அனுமதித்து உத்தரவிடுகிறது.

**முடிவாக,**

இம்மனு கீழ்கண்ட நிபந்தனைகளுடன் அனுமதிக்கப்பட்டு உத்தரவிடப்படுகிறது.

1. மனுதாரர், எதிர்மனுதாரருக்கு செலவுத்தொகையாக ரூ.4000/-ஐ (ரூபாய் நான்காயிரம் மட்டும்) செலவு தொகையாக வரும் 20.06.2024ம் தேதிக்குள் வழங்கவேண்டும். தவறும் பட்சத்தில் இம்மனு தாமாகவே தள்ளுபடி ஆகிவிடும்.

2. இரு தரப்பினரும் அசல் வழக்கை காலதாமதப்படுத்தாமல் விரைந்து முடிக்க ஒத்துழைக்கவேண்டும். மீண்டும் அழைக்க 20.06.2024

இந்த உத்தரவானது என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்ட பின்னர், இன்று 2023–ம் ஆண்டு ஜீன் மாதம் 10ம் நாள் என்னால் அவையறிய பகரப்பட்டது.

K S MALATHI Digitally signed by K S MALATHI Date: 2024.06.10 20:01:02 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
காங்கயம்.

**மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்** : இல்லை

**எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்** : இல்லை.

K S MALATHI Digitally signed by K S MALATHI Date: 2024.06.10 20:01:10 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
காங்கயம்.